செய்தி வெளியீடு எண்: 632 நாள்: 07.09.2018

## செய்தி வெளியீடு

ஆட்சிமொழித் திட்டச் செயற்பாடு குறித்து ஆய்வுப் பணி தமிழ் வளர்ச்சித் துறையால் அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள், கழகங்கள் ஆகிய அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களின் ஆய்வு சென்னை-2, அண்ணாசாலையிலுள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அலுவலகத்தில் 6, 7 மற்றும் 10 ஆகிய நாள்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்று (6.9.2018) நிருவாகப் பணியமைப்பு பிரிவில் ஆய்வு நடைபெற்றது. இன்று 07.09.2018 மற்றும் 10.09.2018 ஆகிய நாள்கள் ஆய்வு நடத்தத் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்றது.

சென்னை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் தா. லலிதா அவர்கள் தலைமையில் உதவி இயக்குநர்கள் வ.சுந்தர், முனைவர் ம.சுசிலா, பெ.இளங்கோ, கண்காணிப்பாளர்கள் பி. வசந்தகுமாரி, சீ.சந்தானலட்சுமி, க. சித்ரா, தே.ஜெயஜோதி, உதவியாளர் கா. சித்ரா ஆகியோர் கொண்ட குழு மின்வாரிய அலுவலகத்தை ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9